87

சுருக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – சத்துணவு மற்றும் குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஒருமாதம் எடுக்காத விடுப்புடன் சேர்த்து அடுத்த மாதம் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் வரை விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2)துறை

அரசு ஆணை (நிலை) எண்.166

நாள் 30–12–2009
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 15ம் நாள்

படிக்கப்பட்டது :-

1 அரசு கடித (நிலை) எண்.220/சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் : 23.08.1993.

2 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.11.09 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.

---

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவு மைய பணியாளர்களுக்கு மாதத்திற்கு ஒரு நாள் மட்டும், முன் அனுமதி பெற்று தற்செயல் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்ற நிபந்தனையுடன் வருடத்திற்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு எடுக்கலாம் என்றும், ஒருமாதம் எடுக்காத தற்செயல்விடுப்பை, அடுத்த மாதத்தில் சேர்த்து எடுக்க முடியாது எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. இந்நிலையில், சத்துணவு, குழந்தைகள் மைய பணியாளர்கள் 21–11–09 அன்று நடத்திய நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

> "சத்துணவு / அங்கன்வாடி பணியாளர்கள் தற்போது மாதம் ஒரு நாள் விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இனிமேல் அவர்கள் ஒரு மாதம் எடுக்காத விடுப்புடன் சேர்த்து அடுத்த மாதம் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் வரை விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும். அவ்வாறு விடுப்பு எடுப்பவர்கள் மாற்று ஏற்பாடுகள் செய்து சத்துணவு வழங்கும் பணிக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்"

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஒருமாதம் எடுக்காத விடுப்புடன் சேர்த்து அடுத்த மாதம் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் வரை விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு விடுப்பு எடுக்கும்போது சத்துணவு வழங்கும் பணிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் மாற்று ஏற்பாடு செய்து கொள்ளவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை, அரசு ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.இராமமோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

சமூக நல ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
தலைமை துறை அரசு நிறுவனத் தணிக்கையர், சென்னை–2

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.7பிரிவு)துறை
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

97